பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 4உ (20-11-67) திங்கள் வெளியூர்: கார்த்திகை 5உ (21-11-67) செவ்வாய் [இதழ்: 131

# சான்றோரை உருவாக்கிடும் களமாகப் பல்கலைக் கழகம்

## கால மாறுதலுக்கேற்ப பொறுப்பும் மாறவேண்டும்

### அண்ணாமலை பட்டமளிப்பு விழாவில் அண்ணா உரை

அண்ணாமலைநகர், நவ. 18—

இன்று நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேருரையாற்றுகையில், "பட்டம் பெற்று, பல்கலைக் கழகத்தினை விட்டு வெளியேறி, வாழ்வுத்துறையில் அடியெடுத்து வைத்திடும் பட்டதாரிகளுக்குத் தக்கதோர் அறிவுரை கூறிடுவதும், அவர்தம் வாழ்க்கைக்கு வழிகாட்டியென விளங்கிடத்தகும் விளக்கவுரையாற்றிடுவதும் இலேசானதல்ல—சுலபமான காரியமும் அல்ல—இது மெத்தவும் பொறுப்பான வேலை -- பொறுப்புச் சுமை என்பதனை உணருகிறேன்" எனச் சுட்டிக்காட்டினர்.

"இதே பட்டமளிப்பு விழா மண்டபத்தில், மாமேதைகள் பலர் கூறிச் சென்றுள்ளதைக் காட்டிலும் சிறப்புற எதனை என்னால் கூறிட இயலும்? ஒருகணம் இதனை எண்ணிப்பார்க்கிறேன்—அந்தப் பேரறிவாளர்களின் அடிச்சுவட்டினைத் தொடர்ந்து, பொதுவாகப் பல்கலைக் கழகங்களின் பொறுப்பு குறித்தும், சிறப்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினைப் பற்றியும் பேசுமாறு என்னைப் பணித்துள்ளீர்கள் எனக் கருதுகிறேன்" எனக் குறிப்பிட்டார்.

"கடந்த காலத்தில் இதே பேரவையில், கற்றறிவாளர்கள் பலராலும் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டு வந்துள்ள கருத்துக் கருவூலங்களை—நல்லறிவுரைகளைத்தான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லப்போகிறேனே தவிர, வேறு இல்லை; ஆனால், அவற்றிற்கு ஆங்காங்கே சற்று விளக்கமும்—குறிப்புரையும்—விரிவுரையும்—எடுத்துக்காட்டுதலும்—சுட்டிக்காட்டுதலும்—என்னால் முடிந்தவரை தர முற்படலாம் என்று கருதுகிறேன்; அது மட்டுமல்ல; 'அந்த நல்லறிவாளர்களின் கருத்துக்களையும், நல்லுரைகளையும் நாட்டின் சாமானியர்களின்—ஏழை எளியவர்களின்—பாமர மக்களின் கருத்தோட்டத்தையொட்டி, சிறிது விமர்சனம் செய்ய முற்படுவது நல்லது -- நாட்டிற்கு நன்மைபயப்பதுமாகும்' என்று நம்புகிறேன்" எனவும் கருத்து விளக்கமளித்தார்கள்.

"சாமானியர்களின் சகாப்தம் இது; இது குறித்து எத்தகையவர்கள் எத்துணைக் கருத்து வேறுபாடு--மாறுபாடு கொண்டிருந்தாலும், 'சாமானியர்களின் -- ஏழை எளியவர்களின் எண்ணங்கள் ஈடேற்றப்பட்டுத் தீரவேண்டிய நேரமிது' என்பதனை மறந்திட முடியாது! இப்படிப்பட்ட சாமானியர்கள்—அவர்கள் எத்துணை ஏழ்மையிலும், அறியாமையிலும் உழன்று உருக்குலைந்து காணப்படினும்—'அவர்தம் கருத்தோட்டத்தை மதித்திட வேண்டும்; அதன்படி நடந்திடவும் வேண்டும்' என்பதைத்தான் உங்களுக்குச் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்; சாமானியர்களின் விருப்பங்களை—எண்ணங்களை—எழுச்சிகளை எடுத்துக்காட்டிடும் பிரதிநிதியாகவே உங்களிடம் பேசிட விரும்புகிறேன்" எனக் குறிப்பிட்டுக் கூறிய முதலமைச்சர் அண்ணா அவர்கள், முதலில் பல்கலைக் கழகங்களுக்குள்ள பெரும் பொறுப்புக்களை விளங்குகையில் கூறியதாவது:—

"மதம் மார்க்கம் அல்லது எத்தகைய கருத்துக்களைப் போதித்திடும்—புகட்டிடும் சிந்தனைக்கூடங்களாயினும் சரி—அவை தத்துவத் துறையாயினும் சரி; அல்லது அரசியல் துறையேயானாலும் சரி—ஒழுக்க இயலாக மட்டும் அன்றி பொருளியலேயானாலும் ஆகட்டும்—அவையெல்லாம், சாமானியர்களை – சராசரி மக்களுக்காகத்தான் உள்ளன என்பதில் ஐயம் ஏதுமில்லை!

எத்துறையானாலும்—அவை கற்பிப்பது எதுவானாலும்—அதுபற்றிய விளக்கமும் விமர்சனமும் கற்றறிவாளர்களிடமிருந்தும், ஆய்ந்தறிந்த அனுபவ மேதைகளிடமிருந்தே வந்திடக் காண்கிறோம். இவற்றை—இச்சிந்தனைகளை, நாட்டின் நடைமுறையாக—மக்களது வாழ்க்கை நெறியாகச் செயல்படுத்திடும் பொறுப்பு மிகப் பெரிது! ஆளுவோரின் பெரும் கடமையும் இதுவே!

## பொறுப்பு மிகப் பெரிது!

இன்று நாட்டின் அறிவுக்களஞ்சியங்களாகவும் கருத்துக் கருவூலங்களாகவும் விளங்குபவை பல்கலைக்கழகங்களே! சிந்தனைத் தெளிவு—மதி நுட்பத் திறன்—சேவையுள்ளம்—ஆகியவற்றின் தூதுவர்களாய்த் திகழ்ந்திடும் வருங்காலக் குடிமக்களைத் தயாரித்திடும் பொறுப்பும் பல்கலைக்கழகங்களையே இன்று சாரும்; எனவே, பல்கலைக்கழகங்களின் பொறுப்பு மிகப் பெரிது!

இன்று, நாட்டின்—நாட்டு மக்களின் வாழ்விலும், வளமான வளர்ச்சியிலும் அவற்றிற்கு மகத்தான பொறுப்பு – பங்கு உளது; அது நாள்தோறும் விரிவாகிக்கொண்டே செல்கிறது!

சமுதாயத்தின் பல்வேறு துறைகளையும், சுற்றுச் சார்புகளையும் பக்குவப்படுத்தி, மக்கள் பயனுறு வாழ்வு வாழ்ந்திட—வாழ வைத்திடும் பணியினை மேற்கொண்டிடத்தக்க நல்ல குடிமக்களைப் பல்கலைக் கழகங்கள் ஆண்டுதோறும் தயாரித்துத் தரும் பெரும் பணி தொடர்ந்தபடிதான் உள்ளது!

## வரட்டுத் தத்துவத்திற்குத் தங்க முலாம்!

முடியாட்சியும், சர்வாதிகாரிகளின் எதேச்சாதிகார ஆட்சி முறையும் தகர்த்தெறியப்பட்டு, மக்களாட்சி நடைபெறும் நாட்கள்—சனநாயக சகாப்தம் மலர்ந்துள்ள இக்காலத்தில், பல்கலைக்கழகங்களின் பணியும் பொறுப்பும் மேலும் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன.

முடியாட்சி அல்லது நிலப்பிரபுத்துவக் காலங்களில் பல்கலைக்கழகங்களின் பணியும் பொறுப்பும் என்ன?—அரசவைகளை அலங்கரிக்கத்தக்க சில பாவாணர்களையும், பிரபுக்களின் பொன்மயமான மாளிகைகளில் கொலுவீற்றிருக்கத்தக்க பண்டிதர் சிலரையும் உண்டாக்குவதுதானே! அவர்கள் மாளிகைவாசிகளின் பொருட்டே தவிர, சராசரி—சாமானிய மக்களின்பொருட்டு அல்ல—என்ற நியதி, கோலோச்சிக்கொண்டிருந்தது அன்று!

மக்களில் மிகப் பலராக உள்ளவர்களைப்பற்றிக் கவலைப்படாமல், ஆனால் மிகச் சிலராக இருந்த மாளிகைவாசிகளைப் பற்றியும், மன்னர்களைப் பற்றியுமே பாவாணர்களும், கற்றறிவாளர்களும், மேதைகளும் கவலைப்படவேண்டும் என்றிருந்த காலம் அது!

மக்களிடமிருந்து ஒதுங்கி எங்கோ ஒரு மூலையில்—தனித்த ஒதுக்கிடத்தில்—புலவர்கள், தமது அறிவையும், ஆற்றலையும், ஆராய்ச்சித் திறனையும் கொண்டு, வரட்டுத் தத்துவத்திற்குத் தங்கமுலாம் பூசிக் காட்டிவந்தனர்; அல்லது, சமுதாயத்தின் மேல் தட்டிலுள்ளவர்களுக்குப் பாமாலை புனைந்து, புகழ்மாலை சூட்டிக் களித்திருந்தனர்—அன்று!

## அந்தக் கட்டம் மாறிவிட்டது!

பல்கலைக் கழகங்களின் பொறுப்பும் பங்கும் முன்காலத்தினைப் போன்றதல்ல—இன்று! மாளிகைக்குள்ளோ அல்லது மடங்களுக்குள்ளேயோ அடைபட்டுப் பணியாற்றிடும் சூழ்நிலை இல்லை! குறிப்பிட்ட வட்டத்திற்குள் – வளையத்திற்குள் சுற்றிச் சுற்றிச் சுழலும் முறையில் கடமையாற்றித் தீரவேண்டிய கட்டம் மாறிவிட்டிருக்கின்றது—இன்று!

பல்கலைக் கழகங்களின் செயற்களம்—பணி புரிந்திடும் அரங்கம்—இன்று, பரந்து விரிந்து கிடக்கிறது! அவற்றின் அடிப்படைக் குறிக்கோளில் மாற்றம் ஏதுமில்லை! ஆனால், சாமானியர்களின் வாழ்வையும் தாழ்வையும் கருத்தில்கொண்டு பணியாற்றிடும் பாங்கினைப் பெற்றுச் செயல் புரிந்திட வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது—இன்று!

## முன்னேற்றப் பாதையில் ஏறுநடைபோட!

மன்னர்கள், மாளிகைவாசிகளின் கூடாரத்திலிருந்து மக்கள் மன்றத்திற்கு வந்திட வேண்டும்—மக்களது பாமரத் தன்மையையும், ஏழ்மையையும் மேலும் அதிகரித்திடவோ அல்லது அவற்றை நிலைபெறச் செய்து நிரந்தரமாக்கிடவோ அல்ல; சாமானிய மக்களது வாழ்வினைச் சீர்படுத்தி செம்மையுறச் செய்து, நல்வாழ்விற்கான நெறியில் ஒழுகிடப் பக்குவப்படுத்திப் பயிற்சி அளித்திடுவதற்காக—வாழும் வகையும் வழியும் காட்டிட—முன்னேற்றப் பாதையில் ஏறுநடை போட்டிடக் கைகொடுத்து அழைத்துச் சென்றிட!

## சாமானியர்களிடம் பெரும் பொறுப்பு

'சாமானியர்களிடம், இன்று சாமானியமற்ற காரியம் – மகத்தான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; 'சனநாயக நாட்டின் குடிமகன்' என்ற முறையில் கடமையாற்ற அந்தச் சாமானியன் முன் நிற்க வேண்டியிருக்கிறது!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

## காதில் விழுந்தது!

"சென்ற சனிக்கிழமையன்று நாட்டில் இரு பட்டமளிப்பு விழாக்கள் நடந்தது தெரியுமா?"

"புரிகிறது-எதற்காக இப்படி 'ரூர்கி'யையும் அண்ணாமலை நகரையும் தொடர்புபடுத்த விரும்புகிறாய் என்று!"

"தலைமையமைச்சர் இந்திரா, ரூர்கியில் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றுகையில் பொறியியல் பட்டதாரிகள் வெளிநடப்புச் செய்ததையும் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களின் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்புப் பேச்சினையும் இணைத்துப் பார்ப்பது செயற்கைதான்—ஒத்துக்கொள்கிறேன்; ஆனால் என்னவோ—எடை போட்டுப் பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை!"

## கீசிங்கர்

இன்று இந்தியாவுக்கு வருகை தரும் மேற்கு ஜெர்மன் அதிபர் கான்சலர் குர்ட் ஜார்ஜ் கீசிங்கர், 1958-ம் ஆண்டில்—அப்போது அதிபராக இருந்த அடினருக்கு எதிராக—ஓர் உறுதி எடுத்துக் கொண்டார்.

"ஓர் அதிபராகவோ, சான்சலராகவோ, அல்லது அயல் விவகார அமைச்சராகவோதான் மீண்டும் மேற்கு ஜெர்மனியின் தலைநகருக்கு வருவேன்" என உறுதி எடுத்துக்கொண்டு வெளியேறிய அவர், அதேபோல் கான்சலராக வரும் சந்தர்ப்பம் கிடைத்தபோதுதான் தாய்நாடு திரும்பினர்!

1956-ம் ஆண்டில் ஒரு தடவையும், 1965-ம் ஆண்டில் மற்றொரு முறையும் அவர் இந்தியாவுக்கு வருகை தந்திருக்கிறார்; என்றாலும், கான்சலராக அவர் இப்போது இரண்டு நாள் பயணம் வந்திருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

'வயதான பெரியவர்' அடினர்—'பொருளாதார பூதம்' டாக்டர் ஏரார்ட் ஆகிய இருவருக்குப்பின் மூன்றாவது கான்சலராக பதவிக்கு வந்திருப்பவர் கிசிங்கர்!

எந்தத் தலைப்பிலும் சாமர்த்தியமாக விவாதிக்கத் தெரிந்த இவருக்கு, ஆங்கிலம்—பிரெஞ்சு—ஸ்பானிஷ்—இத்தாலியன் ஆகிய நான்கு மொழிகள் தெரியும்!

## பிரிட்டிஷ் நாணய மதிப்புக் குறைந்தது

லண்டன், நவ. 19—

இருபதாண்டுகளுக்குப் பிறகு முதல் தடவையாக இப்போது பிரிட்டன், தனது நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டுள்ளது.

தனது ஸ்டர்லிங் மதிப்பை 14.3 சதம் குறைத்திருப்பதாக இன்று பிரிட்டன் அறிவித்தது; அதாவது, 2.40 அமெரிக்க டாலருக்குச் சமமாக ஸ்டர்லிங் மதிப்புக் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 2.80 அமெரிக்க டாலருக்குச் சமமாக ஸ்டர்லிங் மதிப்பு இருந்துவந்தது.

(4-ம் பககம் பார்க்க)

# 'தி.மு. கழகம் தமிழகத்தின் அரசியல் கட்சி மட்டுமல்ல-- தமிழ் மக்களின் வாழ்க்கை முறையாகவே மாறிவிட்டது'

## 'முதன்மையான காங்கிரசல்லாத முதலமைச்சர் அண்ணு ஒருவரே'

### மீண்டும் புகழாரம் சூட்டுகிறுர் பீகார் அமைச்சர்



அண்மையில் சென்னைக்கு வருகை தந்திருந்தபோது கழக நிர்வாகத்தைப் பாராட்டியும், 'இந்தியாவின் காங்கிரசல்லாத முதல் தலைமையமைச்சராக அண்ணு அவர்கள் வரவேண்டுமென்றும் விருப்பம் தெரிவித்துச் சென்ற பீகார் மாநில உள்துறை அமைச்சர் போலோ பிரசாத் சின்கா, கடந்த புதன் கிழமையன்று பாட்ணுவில் மீண்டும் கழக நிர்வாகம்பற்றியும் அண்ணு அவர்களைப் பற்றியும் புகழ்ந்துரைத்திருக்கிறுர்.

அடுத்த மார்ச் திங்களில் தமிழக முதலமைச்சர் அண்ணு அவர்கள் துவக்கிவைக்க—பாட்ணுவில் நடைபெறவிருக்கும் அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் மாநாடு பற்றிச் செய்தியாளர்களிடம் விளக்கிய சின்கா, தி.மு. கழகம் பற்றிக் குறிப்பிட்டிருப்பதாவது :—

"திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் மட்டுமன்றி இந்தியா முழுமையிலும் பரவி, தாழ்த்தப்பட்ட மக்களின் தலையாய இயக்கமாக இயங்க வேண்டும்.

"இந்தியாவின் காங்கிரசல்லாத முதலமைச்சர்களுக்கெல்லாம் முதன்மையாய்—வழிகாட்டியாய் இருந்து வருபவர் திரு. அண்ணுதுரை அவர்கள்தான்.

"தமிழகத்தில் கழக நிர்வாகம், என்னை மிகவும் பரவசமடையச் செய்தது. அங்கே தி. மு. கழகம் ஓர் அரசியல் கட்சியாக மட்டும் அமையவில்லை ; தமிழர்களின் ஒரு வாழ்க்கை முறையாகவே மாறி விட்டது !"

—கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'ஸ்டேட்ஸ்மன்' 17—11—67 இதழில் இத்தகவல் வெளிவந்துள்ளன]

# ஆடம்பர வாழ்க்கை நடத்தும் அதிகாரிகள்

## நிர்வாகச் சீர்திருத்தக் குழு சிபாரிசு --- அரசு ஏற்கிறது

சண்டிகார், நவ. 16—

அரசாங்க அதிகாரிகளிடையே ஊழலை ஒழிப்பது பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழு கூறிய யோசனைகளை பஞ்சாப் மாநில அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

வருமானத்துக்கும் அதிகமாக ஆடம்பர வாழ்க்கை நடத்தும் அதிகாரிகளைப் பற்றி—அச்சிபாரிசுகளின்படி—ஊழல் ஒழிப்புத் துறை இரகசியமாக ஆழ்ந்த விசாரணை நடத்தி, அரசாங்கத்துக்குத் தகுந்த சிபாரிசுகளைக் கூறும்.

ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் மீதான நடவடிக்கைகளில் அரசியல் தலையீடு எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்விஷயத்தில் அரசாங்கம் போடும் உத்தரவுகளை அமைச்சர்கள் உட்பட அனைவரும் கண்டிப்பாகக் கடைபிடிப்பர்.

# குற்றச்சாட்டுக்குள்ளான முன்னுள் காங்கிரசு அமைச்சர்

## குழந்தைகுட்டிகள் பட்டினி கிடப்பதாகப் பசப்பல் !

புவனேசுவர், நவ. 20—

முன்னுள் காங்கிரசு அமைச்சர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் குழுவிடம், முன்னுள் காங்கிரசு அமைச்சர் ஒருவர் ஓர் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறுர்.

"நான் மிகவும் ஏழை ; பட்டினி கிடக்கும் என் குழந்தைகளுக்கு உணவு அளிக்கவே என்னுல் இயலவில்லை ; எனவே, வழக்கு விசாரணைக்கு ஏற்படும் செலவு முழுவதையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்"

என்று அவர், விசாரணைக் குழு முன்பு மனுச் செய்திருக்கிறுர்.

முன்னுள் அமைச்சர் ஆர். பி. மிஸ்ராவுக்கு நோட்டீசு அனுப்புமாறு குழு உத்தரவிட்டிருக்கிறது.

ஒவ்வொரு முன்னுள் அமைச்சர் மீதும் குறிப்பிட்ட குற்றச்சாட்டினை ஒரிசா அரசாங்கம் சுமத்தவில்லை.

விசாரணைக் குழு நியமிக்கப்பட்டதையும் அதன் விசாரணை வரம்பையும் எதிர்த்து, முன்னுள் சுகாதார அமைச்சர் டாக்டர் ஜகந்நாத ராவ், உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்திருக்கிறுர் ! இது குறித்து முடிவு கூறுவதை நீதிபதிகள் தள்ளிவைத்திருக்கிறுர்கள்.

# இந்தியா முழுமையிலும் முதலீடு செய்திருப்போர் மார்வாரிகள் மட்டுமே !

## வடக்கே முதலீடு செய்திருக்கும் தமிழக நிறுவனங்கள் கணக்கில் வராத அளவுக்குக் குறைவே !

### ஆர்.கே.ஹசாரி அறிக்கையின் விளக்கங்கள்

அங்கீகரிக்கப்பட்ட மார்வாரி நிறுவனங்கள் மட்டுமேதான் இந்தியா முழுமையிலும் முதலீடு செய்துள்ள ஒரே வியாபார சமுதாயமாக இருக்கிறது.

ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தைத் தவிர மார்வாரிகள் வியாபார முதலீடு செய்யாத மாநிலமே இந்தியாவில் ஏதும் இல்லை ! மேற்கு வங்காளம், மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய பகுதிகளில்தான் மார்வாரிகளின் முதலீடுகள் அதிக அளவில் இருக்கின்றன !

மார்வாரிகளுக்கு அடுத்து வருபவர்கள் குசராத்திகளாக இருக்கிறுர்கள் ! மகாராட்டிரம், குசராத், தமிழகம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில், குசராத்திகள் அதிக அளவில் முதலீடு செய்துள்ளனர் !

தெற்கத்திய வியாபார நிறுவனங்களின் முதலீடு, தென்னக மாநிலங்களான தமிழகம், கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய இடங்களில் மட்டுமே இருக்கின்றன ; மகாராட்டிரத்தில் மிகச் சிறிய அளவுக்கே காணப்படுகிறது.

பஞ்சாபிய சமுதாயத்தின் முதலீடு, பஞ்சாப் மாநிலத்தில் மட்டுமே பெரும் பகுதி இருந்தாலும், மகாராட்டிரம், மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், பீகார், தமிழகம் ஆகிய இடங்களுக்கும் பரவியிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து தங்கியுள்ள வியாபார நிறுவனங்களின் முதலீடு மேற்கு வங்காளம், தமிழகம், அசாம், மகாராட்டிரம், பீகார் ஆகிய மாநிலங்களில் அதிகம் காணப்படுகின்றன.

கொள்கைப்படி, அரசினர் முதலீடுகள் எல்லா மாநிலங்களிலும் இருந்தாலும், அளவு வரிசைப்படி மத்தியப் பிரதேசம் பெற்றிருக்கும் அரசாங்க முதலீடுகள்தான் அதிகம் ; அடுத்ததாக—ஆந்திரம், பீகார், தமிழகம், கருநாடகம், ஒரிசா, கேரளம், டில்லி, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் வருகின்றன.

—[தொழில் நிட்டங்கள், அதற்கான அனுமதி பற்றிய டாக்டர் ஆர். கே. அசாரி அறிக்கையின் இறுதிப் பகுதி, மேற்கண்ட விவரங்களைத் தருகிறது]

# டாக்டர் சந்திரசேகரன் தகுதிக் குறைப்பு

## அமைச்சரவை மாறுதலின் விளைவு

புதுடில்லி, நவ. 18—

அண்மையில் மத்திய அமைச்சரவையில் நடைபெற்ற மாறுதல்களில், டாக்டர் எஸ். சந்திரசேகர், பதவி இறக்கம் பெற்றிருக்கிறுர்.

கடந்த எட்டு மாதங்களாக டாக்டர் எஸ். சந்திரசேகர், 'சுதந்தரமுள்ள' அமைச்சராக சுகாதாரம்—குடும்பக் கட்டுப்பாட்டுத் துறைகளைக் கவனித்துவந்தார்.

சுகாதாரத் துறையை, சத்திய நாராயண் சின்காவுக்கு ஒதுக்கத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி விரும்பினுர் ; 'குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையை மட்டும் டாக்டர் சந்திரசேகரர் கவனித்துக் கொண்டால் போதுமானது' என்பது அவரது கருத்து ; ஆனுல் இந்த யோசனையை, டாக்டர் சந்திரசேகர் விரும்பவில்லை ; 'சுகாதாரத் துறையைத் தாம் சரிவரக் கவனிக்கவில்லை' என்ற கருத்துக்கு இடமளிக்கும் என்று அவர் அஞ்சினுர்.

எனவே, டாக்டர் சந்திரசேகரை 'மட்டம் தட்டுவதற்காக' சத்திய நாராயண் சின்காவுக்கு இலாகாவை ஒதுக்கி, டாக்டர் சந்திரசேகரை அரசாங்க அமைச்சராகப் பதவி இறக்கம் செய்திருக்கிறுர் இந்திரா காந்தி.

மத்திய அமைச்சரவையில் பதவி வகிக்கும் இரு 'குட்டி' அமைச்சர்களில் டாக்டர் சந்திரசேகரும் ஒருவர். இவர் முன்பு தெலுங்கு வட்டாரத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், தமிழ் நாட்டில் வாழ்ந்துவந்தார்.

தமிழகத்தைச் சேர்ந்தர்கள் யாவரும், மத்திய அமைச்சரவையில் 'காபினெட்' தகுதியுள்ள அமைச்சர் ஆக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆங்கில நீடிப்புக்கு அகாலி தளம் ஆதரவு

சாண்டிகார், நவ. 20—

"ஆங்கிலமே தொடர்ந்து இணைப்பு மொழியாக இருந்து வர வேண்டும்"

என்று, பஞ்சாப் மாநிலத்தில் இயங்கும் சிரோமணி அகாலி தளம் தீர்மானம் நிறைவேற்றியிருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது.

# கப்பலில் வந்த சரக்கு கடலுக்கு இரையாகும்

மத்தியக் கிழக்கில் நெருக்கடி ஏற்பட்டதிலிருந்து அடைபட்டுக் கிடக்கும் சூயஸ் கால்வாய் நடுவே மாட்டிக் கொண்டுள்ள சில கப்பல்கள், பிரிட்டனுக்குக் கொண்டு வந்து கொண்டிருந்த பழ டின்களைக் கடலில் போடலாம் என்று கூறப்படுகிறது.

# திருமண வயதை உயர்த்தத் திட்டம்

கொழும்பு, நவ. 18—

இலங்கையில் பெண்களுக்குத் திருமணத்துக்கான குறைந்தபட்ச வயதை 18-லிருந்து 21-ஆக உயர்த்தும் திட்டம் பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இளம் வயதில் அவசரப்பட்டுத் திருமணம் செய்துகொள்வதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

நன்னடத்தை குழந்தை நல் வாழ்வு இலாகா இதுபற்றி ஒரு ஆய்வு நடத்தியது ; இளம் வயதுத் திருமணங்களில் 60 சதவிகிதம் முறிவதாக ஆய்வு மூலம் தெரிய வந்தது ; ஏனெனில், 21 வயதுக்குக் குறைந்தவர்கள் குடும்பப் பொறுப்பை ஏற்கப் பக்குவம் பெருதவர்களாக உள்ளனர். பெரும்பாலான திருமணங்கள் சில காலத்துக்குள் மணவிலக்கு அல்லது சட்டபூர்வப் பிரிவினையில் முடிகின்றன.

தவிர, மேற்படி நடவடிக்கை, நாட்டில் மக்கட்தொகைப் பெருக்கத்தையும் தடுக்க உதவும் என்று கருதப்படுகிறது.

# அசாம் பிரிவினைக் கிளர்ச்சி

## முதலமைச்சர் சாலிகாவுக்கு பெருந் 'தலைவலி' !

கௌகத்தி, நவ. 15—

அசாமில் தனி மாநிலக் கோரிக்கைக் குரல்கள் மலைகளிலும், பள்ளத்தாக்குகளிலும் அதிக அளவில் எதிரோலித்து வருகின்றன !

'மலை மாவட்டங்களைக் கொண்ட தனி மாநிலம் வேண்டும்' என்ற கோரிக்கை, நெருக்கடி கட்டத்தை நெருங்கி வருகிறது. அதேநேரத்தில், அசாமின் சமவெளிப் பகுதிகளில் மற்றும் இரு தனி மாநிலக் கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

சிப்சாகர், லக்கிம்பூர் ஆகிய மாவட்டங்களைக் கொண்ட 'அகோம் இராஜ்யம்' வேண்டும் என்றும், கோல்யாரா மாவட்டம்--காரோ மலைகள்--மற்றும் சில அண்டைப் பகுதிகள் ஆகியவற்றைக் கொண்ட 'காமாட்டபூர் இராஜ்யம்' அமைக்க வேண்டும் என்றும் அக்கோரிக்கைகள் கூறுகின்றன.

தங்கள் இயக்கத்தைத்தீவிரமாக நடத்த அகோம்கள், ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளனர்.

தங்களுடைய கோரிக்கைக்கு ஆதரவு திரட்டும் பொருட்டு அகோம் தலைவர்கள், அந்த இரு மாவட்டங்களிலும் சுற்றுப்பயணம் செய்துவருகின்றனர்.

அதேபோன்று, 'காமாட்டபூர் இராஜ்ய' ஆதரவாளர்களும் தமது பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்துவருகின்றனர் ; அவர்கள், பழைய 'காமாட்ட இராஜ்யத்'தை மீண்டும் தோற்றுவிக்க விரும்புகின்றனர் ; 'பழைய காமாட்ட இராஜ்யம், தனித்ததொரு கலாசாரத்தையும், மிக முன்னேறிய இலக்கியத்தையும் பெற்றிருந்தது' என்று அவர்கள் கூறுகின்றனர்.

காமாட்டபூர் இராஜ்ய இயக்கத்தின் முக்கிய தலைவரான இராஜா அஜித் நாராயண தேவ், 'எங்களுடைய கலாசாரமும் இலக்கியமும் அழிவை எதிர்ப்பட்டுள்ளன; சக்தி மிக்க அண்டையர்களின் பல செல்வாக்குகளும், அரசியல்—பொருளாதாரத் துறையில் நாங்கள் நசுக்கப்படுவதும், அதற்குக் காரணங்களாகும்' என்று சொன்னுர்.

ஆந்திரம், தமிழ் நாடு, குசராத், மகாராட்டிரம், அரியாணு, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் அமைக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டி, 'சனநாயக அடிப்படையில் புதிய மாநிலங்களை அமைப்பதால் நாட்டின் ஒற்றுமை பலப்படுமே தவிர, சிலர் அஞ்சுவது போன்று பலவீனமடைந்துவிடாது' என்றுர்.

"அசாமை மாற்றியமைக்கும் திட்டம் எதுவாக இருந்தாலும் மாநிலத்தின் நிர்வாகக் கூட்டமைப்புக்குக் குந்தகம் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று டெல்லியில் காங்கிரசுத் தலைவர்களையும், எதிர்க் கட்சித் தலைவர்களையும் வற்புறுத்துவதற்காக அசாமிலிருந்து உயர் அதிகார காங்கிரசுக் குழு ஒன்று சென்றிருக்கிறது.

அசாமில் அநேகமாக எல்லா அரசியல் கட்சிகளும், சர்வ கட்சி மலைத் தலைவர்கள் மாநாட்டு அமைப்பின் கோரிக்கையை எதிர்க்கின்றன.

"அசாமைத் துண்டுபோடும் எத்திட்டத்தையும் ஏற்க முடியாது; அவ்விதம் துண்டுபோட்டால் அது இந்தியாவின் கிழக்குப் பகுதிக்கு நாசத்தை உண்டாக்கும்" என்று அசாம் முதலமைச்சர் சாலிகா கூறியுள்ளார்.

"அசாம் மாநிலத்தை மாற்றி அமைப்பதில் ஏதேனும் தவறு செய்தால் அதனுல் ஏற்படும் விளைவுகள் அனைத்துக்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பு" என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

"தனி மாநிலப் பிரிவினைதான் மலைப் பகுதிக்கும் சமவெளிப் பகுதிகளுக்கும் ஏற்றதாகும்" என்று கருதும் சர்வகட்சி மலைத் தலைவர்கள் அமைப்பு, முழுமூச்சுப் போராட்டத்துக்குத் தயாராகி வருகிறது.

# முந்திரி ஏற்றுமதியில் இந்தியா பாதிக்கப்படும் நிலைமை

வாஷிங்டன், நவ. 18—

"உலகின் முந்திரி ஏற்றுமதி வர்த்தகத்தில் இந்தியா செலுத்தி வரும் ஏகபோகம் குறைந்துவிடலாம்" என்று வேளாண்மை உற்பத்தியாளர் அனைத்து நாட்டுக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

"உலகின் முந்திரி உற்பத்தியில் 90 சதவிகிதம், இந்தியாவில், கையினுல் பக்குவப்படுத்தப்படுகிறது ; ஆனுல் அண்மை ஆண்டுகளில், ஆப்பிரிக்காவில் இயந்திரங்களைப் பயன்படுத்தி முந்திரியைப் பக்குவம் செய்யும் தொழில் விரைவாக வளர்ந்துள்ளது ; எனவே, முந்திரி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு குறையலாம்" என்று அது கூறுகிறது.

# கரம்பக்குடியில் சீரணித் தொண்டர்களின் சீரிய பணி!

## மூன்று பர்லாங் தூரம் வாய்க்கால் வெட்டினர்

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் சீரணித் தொண்டர்கள் விவசாயத்துக்குப் பயன்படும் வேலையையே இரண்டாவது வேலையாக எடுத்துக்கொள்ளத் தீர்மானித்து, நரியாற்றில் தண்ணீர் வீணே சென்றுகொண்டிருப்பதை, மானியக்குளத்துக்குக் கொண்டு செல்லப் பாசன வாய்க்கால் வெட்டும் வேலையை எடுத்துக்கொண்டனர்.

14—11—67-ல், கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் திரு. துரை. விஜயரெகுநாத- பல்லவராயர் தலைமையில், துணைப் பெருந் தலைவர் திரு. க. முத்து (செட்டியார்) அவர்களால், கால்வாய் வெட்டும் பணி துவக்கி வைக்கப்பட்டது.

சீரணித் தொண்டர்கள், ஊராட்சி ஒன்றிய விரிவுப் பணியாளர்கள், கிராம நல ஊழியர்கள் 75-பேர், கிராம விவசாயிகள் 50 பேர்—ஆக மொத்தம் 125-பேர் காலை 8-மணிமுதல் மாலை 6-மணி வரையில் பணியில் ஈடுபட்டு, நரியாற்றிலிருந்து மானியக்குளம் வரையில் சுமார் 3 பர்லாங்கு தூரம் பாசன வாய்க்கால் வெட்டி, தண்ணீரைப் பாசனத்துக்காக மானியக்குளம்வரையில் கொண்டுவர வழிகோலப்பட்டது.

இந்தப் பாசன வாய்க்கால் மூலம் பயனடையும் குளம், மானியக்குளம். 160 ஏக்கருக்கு இதனுல் பாசனம் கிடைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சீரணித் தொண்டர்கள் செய்த இந்த வேலையின் மதிப்பு, சுமார் ரூ. 750 ஆகும்.

சீரணி உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் திரு. க. முத்து (செட்டியார்), பனியன்கள் அன்பளிப்பாக வழங்கினுர்.

# தேவையூரில் ஏழு பர்லாங் நீளச் சாலை அமைப்பு

திருச்சி மாவட்டம் வேப்பந் தட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 40 சீரணித் தொண்டர்கள், தேவையூர் கிராமத்தில் உள்ள 7 பர்லாங் நீளமுள்ள கால்வாயில் செப்பனிடும் பணியை, 11—11—67-ல் தொடங்கினர்.

செப்பனிடும் பணியை ஒன்றிப்பு ஆணையாளர் திரு. ஜான் வில்சன் தலைமையில் திரு. செல்லக்கருப்பன் தொடங்கிவைத்தார்.

12—11—67 மாலையில் அரியலூர் கோட்டாட்சித் தலைவர் திரு. கோவிந்தராசன் பார்வையிட்டு சீரணியினரின் தொண்டினைப் பாராட்டி ஊக்குவித்தார்.

இவ்வேலையை முடிக்க சுமார் 15 நாட்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வேலை முடிந்தால், சுமார் 150 ஏக்கர் நஞ்சை நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவர இயலும். இக்கால்வாய், இது வரையில் பாசன வசதிக்குப் பயனில்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

சீரணி வேலையில் முன்னின்று தேவையூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. பக்ருதீன் நடத்தி வருகிருர்.

# அரவக்குறிச்சியில் பள்ளிக் கட்டிடப் பணி

14—11—67 அன்று அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சின்னுக்கவுண்டனூரில் உள்ள பள்ளி மதிய உணவுக் கட்டிடத்தை அரவக்குறிச்சி தி.மு. கழகக் கிளைச் செயலாளர் பூ. ச. தண்டபாணி (இயக்குநர், திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை) தலைமையில், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பெ. கஸ்தூரி துவக்கிவைத்தார்.

சீரணியின் நோக்கத்தையும், அதன் அவசியத்தையும் விளக்கி பூ. ச. தண்டபாணி, அரவக்குறிச்சி மருத்துவ அதிகாரி இராம சுப்பிரமணியம், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் சுப்பிரமணியம், ஆணையர் நரசிம்மன், பள்ளி ஆய்வாளர் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

சீரணியைச் சார்ந்த கந்தசாமி நன்றி நவின்றுர்.

உயர்நிலைப் பள்ளி மாணவர் சிலரும் பங்கேற்றனர். கட்டிடம் முடியும் நிலையில் உள்ளது. இம்முயற்சி இவ்வட்டார மக்களுக்கு மகிழ்ச்சி கொடுப்பதாய் உள்ளது.

# திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்

## குழந்தைகள் நாள் விழாவைக் கொண்டாடியது

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளாளகுளம் கிராமத்தில் 14—11—67-ம் நாளன்று குழந்தைகள் நாள் விழா கொண்டாடப்பட்டது.

ஆலங்குடித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. வி. சுப்பையா பி.ஏ. தலைமை வகிக்க —திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆணையர் பெ. வேலாயுதம், மற்றும் ஆசிரியர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

கிராம வானொலி மன்றத்தை ஆணையர் துவக்கிவைத்து விவசாய மக்களுக்கு இன்றைய அரசு செய்துவரும் திட்டங்களைப் பற்றி எடுத்துரைத்தார்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கிய பின், வெள்ளாகுளம் கிராமம் வளமடைய அம்புலியாற்றின் குறுக்கே அணை கட்டவும், மின்சாரம் கிடைக்கவும் உடனடியாக ஏற்பாடுகள் செய்வதாகச் சட்டமன்ற உறுப்பினர் உறுதி கூறினுர்.

# இந்தியாவுக்கே தலைமை தாங்கும் தலைவராவார் அண்ணு!

## அடக்க உணர்ச்சியே நம் கழகத்தை வளர்த்துவரும் சக்தி

## 'தரங்கெட்ட பேச்சால் காங்கிரசார் அழிவை நோக்கிச் செல்கின்றனர்'--அமைப்புச்செயலாளர் என்.வி. நடராசன் பேச்சு

சென்னை, நவ. 19—

"போதுத் தேர்தலிலும், இடைத் தேர்தலிலும் நாம் பெற்ற வெற்றி மகத்தானதாகும்.

"நமது கழகம் ஒவ்வொரு படியாக அடியெடுத்து வைக்கிறது; அதை யாராலும் அசைக்கமுடியாது.

"கழகத்தின் வளர்ந்துவரும் சக்தி, உறுதியாக — நிதானமாக வளர்ந்துவருகிறது.

"எதிர்காலத்தில் இந்தியாவுக்குத் தலைமைதாங்கி வழி காட்டக்கூடிய ஒரு மாநிலம் இருக்குமானுல், அது, தமிழ்நாடாகத்தான் இருக்கும்.

"இந்தியாவுக்குத் தலைமைதாங்கி வழி நடத்திச் செல்லப் பொருத்தமானவர் அறிஞர் அண்ணுதான் என்பதை அடக்கத்துடன் கூறிக்கொள்கிறேன்"

என்று அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் 13—11—67 அன்று நடந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினுர். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பொதுத் தேர்தலில் கழகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி, கழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. அந்த வெற்றியுடன், தென் சென்னை வெற்றியும் இடம் பெறும்.

தரங்கெட்ட பேச்சினுலேயே காங்கிரசுக்காரர்கள் தோல்வி மேல் தோல்விபெற்று வருகிருர்கள்.

நாம் நடத்திய விலைவாசிப் போராட்டத்திற்குப்பின் பெற்ற திருச்செங்கோடு வெற்றியிலிருந்து காங்கிரசுக்கு அழிவு காலம் துவங்கிவிட்டது; விலைவாசிப் போராட்டத்தின எதிரொலியாக இத்தகர்தல் முடிவு அமைந்தது.

அறிஞர் அண்ணுவும் மற்றும் முக்கிய தலைவர்களும் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட தொண்டர்களும் சிறையிலிருந்தவேளையில், வெளியிலே இருந்த நமது கழகக் கண்மணிகள் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது; அவர்களையெல்லாம் நான் கழகத்தின் கருவூலமாகக் கருதுகிறேன்.

பொதுத் தேர்தலில் நாம் வெற்றிபெற்றும், நாம் காட்டிய அடக்க உணர்ச்சியே, இடைத் தேர்தலிலும் நமக்கு வெற்றியை ஈட்டித் தந்திருக்கிறது. இந்த அடக்க உணர்ச்சியே நமது கழகத்தின் மாபெரும் சக்தியாகும்."

# கழகத் தோழர் வீடு தீக்கிரை

## காங்கிரசார் கைவரிசை?

ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட நங்கநல்லூரில் உள்ள டாக்டர் அம்பேத்கார் வீதியில் வசிக்கும் தி.மு. கழகத் தோழர் காளப்பனுடைய ஓலைக் குடிசை 16-11-67 காலை சுமார் 10-30 மணியளவில் தீப்பற்றியது.

வீட்டில் ஒருவரும் இல்லாத சமயத்தில் கூரையின் மேட்டுப் பக்கத்திலிருந்து புகை வருவதைக் கண்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். கோபால் மேஸ்திரி என்பவரும், மற்றும் பலரும் எரிந்துகொண்டிருந்த குடிசையைத் தண்ணீர் ஊற்றி அணைக்க முயற்சிக்கையில், தீயணைக்கும் படையினர் வந்து தீயை அணைத்தனர்.

குடிசை தீப்பிடித்த செய்தி தோழர் காளப்பனுக்கு காலை 11-30 மணிக்குக் கிடைத்தது; அவர் ஓடி வந்து பார்த்தபொழுது துணிமணிகளும், மற்ற உடைமைகளும் எரிந்து சாம்பலாகிக் கிடப்பதையும், தனது குடும்பம் நடுத் தெருவில் நிற்பதையும் கண்டு கண் கலங்கினுர்; உடனே இது பற்றி ஆலந்தூர் கிளைக் கழகச் செயலாளர் எஸ். பாலன் அவர்களிடம் முறையிட்டார்.

உடனே ஆலந்தூர் எஸ். பாலனும், ஆதம்பாக்கம் வாசு, கோ.சு. மணி மன்றத் துணைச்செயலாளர் லோகநாதன், ஆகியோரும் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

தீயை அணைக்காமல் இருந்திருந்தால் 50-க்கு மேற்பட்ட குடிசைகள் தீயில் எரிந்து சாம்பலாகியிருக்கும்.

இது குறித்துக் காவல் துறையினருக்கும், உள்ளூர் கணக்குப் பிள்ளைக்கும் புகார் தெரிவிக்கப்பட்டது.

தோழர் காளப்பன் 7 ஆண்டுக் காலமாகத் தி. மு. கழகத்தில் உறுப்பினராக இருப்பவர்; அவர் வசிக்கும் அந்தப் பகுதியில் அவருடைய வீட்டில் மட்டும்தான் கழகக் கொடி பறந்து கொண்டிருக்கும்.

தென் சென்னை இடைத் தேர்தலில் முரசொலி மாறன் வெற்றி பெற்றதை முன்னிட்டு 8—11—67 மாலை 6-மணிக்கு தம் இல்லத்தில் புதுக்கொடி ஏற்றி, அங்குள்ளவர்களுக்கு இனிப்பு வழங்கினுர்.

காளப்பனுடைய குடும்பத்தாருக்கு ஆலந்தூர் எஸ். பாலன் ரூ. 20-ம், சமையலுக்குரிய சாமான்களும் வாங்கிக் கொடுத்து உணவும் வழங்கி ஆறுதல் கூறினுர்.

இந்தக் கொடுஞ்செயலைக் காங்கிரசுக்காரர்கள்தான் செய்திருக்க வேண்டும் என்று பொதுமக்கள் கூறுகிருர்கள்.

# முதலமைச்சர் அண்ணுவுக்கு கடலூர் நகராட்சி வரவேற்பு

## அமைச்சர் கோவிந்தசாமியும் பங்கேற்பு

கடலூர், நவ. 17—

கடலூர் நகராட்சி மன்றத்தின் சார்பில் இன்று முதலமைச்சர் அண்ணு அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

"நகராட்சித் தலைவர் வி. தங்கராசு அவர்களின் அறுபதாண்டு நிறைவின் நினைவாக நகராட்சி நூல் நிலையக் கட்டிடத்தை பதினுேராயிரம் ரூபாய்ச் செலவில் கட்டிக் கொடுக்க அவர் முன்வந்துள்ளார்" என, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

திருப்பாதிரிப்புலியூரில் சட்டப்படவிருக்கும் நகராட்சி அலுவலர்களுக்கான குடியிருப்புக்கும், நகராட்சித் தலைவர் வி. தங்கராசு அவர்களின அறுபது ஆண்டு நினைவு நகராட்சி நூல் நிலைய—படிப்பகத்திற்கும் அண்ணு அவர்கள் அடிக்கல் நாட்டினுர்கள்.

சட்டமன்ற உறுப்பினரும் வழக்கறிஞருமான இரெ. இளம்வழுதி வரவேற்பிதழை படித்தளித்தார்.

நகராட்சி உறுப்பினர் திரு. சுப்பிரமணியத்தின் குழந்தைக்கு அண்ணு அவர்கள், 'மதியழகன்' எனப் பெயர் சூட்டினுர்.

திரு. சீராமுலு எம்.சி. நன்றி கூறினுர்.

அண்ணு அவர்கள் பேசுகையில், கடலூர் நகராட்சி மன்றம் கொடுத்துள்ள திட்டங்கள் ஆடம்பரத் திட்டங்கள் அல்ல என்றும், நகர மக்களுக்கு மிகவும் இன்றியமையாத் திட்டங்களாகும் என்றும், இந்தத் திட்டங்களைத் தக்க முறையில்—தக்க நேரத்தில் நிதி ஒதுக்கி நிறைவேற்றித் தருவதில் அக்கறை செலுத்துவதாகவும் உறுதி அளித்தார்.

# மண் மங்கலத்தில் ஒரு மைல் நீளச் சாலை

கரூர் வட்டம் மண்மங்கலத்தில் 8—11—67 காலை 10-மணியளவில் சீரணித் தொண்டர்களால் கட்டப்படும் பள்ளிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும்—சாலை அமைப்பு விழாவும் நடைபெற்றது. விழாவுக்குக் கரூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எஸ். முருகையன் தலைமை தாங்கினுர்.

பள்ளிக்கான அடிக்கல்லை கரூர் கோட்டாட்சித் துணைத் தலைவர் பார்த்தசாரதி ஐ.ஏ.எஸ். நாட்டினுர்.

சாலை போடும் பணியினை மாவட்டச் சீரணித் தலைவரும் மாவட்ட தி. மு. க. செயலாளருமான அன்பில் தர்மலிங்கம் துவக்கிவைத்தார்.

மாவட்டச் செயலாளரும், கோட்டாட்சித் தலைவரும் மண் வெட்டிச் சிறிது நேரம் சாலை போடும் பணியில் ஈடுபட்டதும் சீரணித் தொண்டர்களும், பள்ளி மாணவர்களும் மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் பணியைத் துவக்கினர்.

மண்மங்கலத்திலிருந்து வள்ளி பாளையம்வரை ஒரு மைல் நீளச் சாலையில் சிறிது நேரத்துக்கெல்லாம் சுமார் 1 பர்லாங் தூரம் சாலை அமைந்துவிட்டது.

# மொழிச் சிக்கல் தீர புதிய யோசனை!

"இந்தி ஒன்றுதான் மத்திய ஆட்சிமொழியாக இருக்கவேண்டும்; இந்தி மாநிலங்களில் உருதுவை இரண்டாவது ஆட்சிமொழியாக ஆக்கக்கூடாது" என்று இந்தி வெறியர்கள் பிடிவாதம் செய்துவருகையில், டாக்டர் டி.வி. நட்கார்னி என்ற எழுத்தாளர், மொழிச் சிக்கல் தீருவதற்குப் புதுமையான வழி ஒன்றைக் கூறியிருக்கிருர்.

"மாநிலத்தில் வழங்கும் பெரும்பான்மை மொழியுடன், அதனைத் தொட்டுக் கொண்டிருக்கும் அண்டை மாநிலங்களின் மொழிகளையும் மாநில ஆட்சி மொழிகளாக ஆக்கிவிட வேண்டும்"

என்ற கருத்தை அவர் வெளியிட்டிருக்கிருர்.

# உடுமலையில் சாதிக் பாட்சா

## வெற்றி விழாக் கூட்டத்தில் பங்கேற்பு

உடுமலை 1-வது வட்டம் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களுக்கு வரவேற்பும், தென் சென்னை வெற்றி விழாக் கூட்டமும் நடைபெற்றது.

வழிநெடுகிலும் அமைச்சருக்குத் தாய்மார்கள் ஆரத்தி எடுத்தும், மலர்கள் தூவியும் வரவேற்றனர்.

பின், அமைச்சர் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்; திரு. கிருஷ்ணசாமி தலைமைவகித்தார்.

திரு. குழந்தைவேல் பி.ஏ.பி.எல்., கோர்ட்டார் அப்பன், சட்டக் கல்லூரி மாணவர் தலைவர் களந்தை ஜின்னு ஆகியோர் பேசினர்.

பின், அமைச்சர் சாதிக் பாட்சா பேசுகையில், கடந்த 8 மாத காலத்தில் கழகம் ஆற்றியுள்ள சாதனை குறித்தும் இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும், வரும் நகரமன்றத் தேர்தல்களில் பொதுமக்களின் பணி குறித்தும்—கழகத் தோழர்கள் ஆற்றவேண்டிய கடமை குறித்தும் உரையாற்றினுர். தலைவர் நன்றி கூறினுர்.

# திருத்துறைப்பூண்டி வட்டத் தோழர்கட்கு:

3—11—67 அன்று நடைபெற்ற திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழகக் கூட்டத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து நான் விலகிக்கொள்வதை வட்டக் கழகம் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டு அடியிற்கண்ட திரு. இரா. சங்கரன் அவர்களை பொறுப்பாளராக நியமித்துள்ளது; எனவே, இனி,திருத்துறைப்பூண்டி வட்டக் கழகச் சம்பந்தமாக அடியிற்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்" என, முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிக்கிருர்.

முகவரி :—இரா. சங்கரன், ஊராட்சிமன்றத் தலைவர், பொறுப்பாளர் வட்ட தி. மு. க., கரியாப்பட்டினம் அஞ்சல், திருத்துறைப்பூண்டி வட்டம்.

# பட்டமளிப்பு விழாவில் அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சனநாயக உரிமை—கடமையின் நிமித்தம், மக்களாட்சியை நிர்மாணித்திடும் பெரும் பொறுப்பு, சாமானியர்களின் எண்ணத்தைப் பொறுத்துத்தான் உள்ளது!

## இலேசான காரியமா இது?

'மக்களாட்சி'—'சனநாயக அரசு'—இச்சொற்கள், எத்தனையோ இன்பக் கனவுகளை - ஏற்றம் மிகுந்த எதிர்கால வாழ்வினை - வளமான, நிம்மதியான சமுதாயச் சூழ்நிலையை—அந்தச் சாமானியர்களின் எண்ணத் திரையில் நித்தம் நித்தம் எழிலோவியமாகத் தீட்டிக் காட்டுகின்றது! எண்ணிடும் பொழுதெல்லாம், மகிழ்ச்சி—கிளர்ச்சி எழுகின்றது! நல்லாசை உணர்வுகள் தூண்டிவிடப்படுகின்றன!

இத்தகு இன்பபுரிப் பயணத்தினை மேற்கொண்டிருப்பது இலேசான காரியமா? சலியாத உழைப்பும், எடுத்த காரியத்தைத் தொடுத்து முடித்திடும் விடாத முயற்சியும், தடைக் கற்கள் அனைத்தையும் தாங்கிடும் இதய வலிமையும், பொறுமையும், பொறுப்புணர்ச்சியும், மிக மிகத் தேவைப்படுகின்றனவே!

நாணயம்—நீதி—நேர்மை—தன்னம்பிக்கை—தன்முனைப்பு எனப்படும் சீரிய நற்குணங்களைப் பூண்டு ஒழுகினால்தானே இன்ப வாழ்வு கிட்டிடும்?

தன்னை உணர்ந்து—தனது உற்றார், உறவினர், ஊர் மக்கள் அனைவரின் தேவைகளையும் உணர்ந்து மதித்து நடந்திடும் பாங்குடன் கூடிய முயற்சி - உழைப்பினை மக்கள் அனைவரும்—குறிப்பாக சாமானியர்கள் அனைவரும் பெற்றால்தான், இச்சீரிய செயல், நடைமுறைக் காட்சியாக முடியும்! மக்களது அன்றாட வாழ்க்கை நெறியாக மாறிட முடியும்; இப்பெரும் பொறுப்பினை மக்கள் மன்றத்திற்கு உணர்த்திடும் வல்லமை பல்கலைக்கழகங்களுக்கு உண்டு.

## சொற்றொடர்--உருவம் பெற்றுவிட்டது!

'சாமானியர்களின் எண்ணமும் எழுச்சியும் அரசோச்சும் காலமிது' என்று குறிப்பிட்டேன்; ஆம்; சாமானியர்கள்—ஏழை எளியவர்தான் இன்று அரசினை அமைத்திடும் ஆற்றலைப் பெற்றுள்ளனர்!

ஏழை எளியவர்கள் தங்களது தலைவிதியை—தங்களது வாழ்வையும் தாழ்வையும் தாங்களே நிர்ணயித்துக்கொள்ளும் வல்லமை பெற்றுவிட்டனர்! 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற சொற்றொடர், செயல் உருப்பெற்று உலவத் தொடங்கிவிட்டிருக்கிறது!

மாட மாளிகைகளிலும், கூடகோபுரங்களிலும் 'மன்னர்கள்' பிறந்த காலம் மலையேறிவிட்டது! பட்டிதொட்டிகள் எங்கணும்—குடிசைகள், குச்சு வீடுகள், அனைத்தும்—இந்நாட்டு மன்னர்களின் பிறப்பிடமாய்த் திகழ்ந்திடும் நேரம் இது!

## ஆற்றல் மெருகேறிய செம்மல்களாக...!

குடியரசுத் தத்துவமும், மக்களாட்சி முறையும் மாண்புமிகு ஏற்றம் பெற்றிடும் வகையில்—நாட்டுக் குடிமக்களை வழிநடாத்திடச் சென்றிடத்தக்கவிதத்தில்—மாணவர்களை அறிவுப் புடம்போட்டு ஆற்றல் மெருகேற்றிச் செயல்திறம்படைத்திட்ட செம்மல்களாய்ச் செம்மைப்படுத்திடும் நல்ல குடிமக்களாய் உருவாக்கிடும் பெரும் பொறுப்பு -- நல்வாய்ப்பு, பல்கலைக்கழகங்களிடமே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## அருங்குணத்திற்கு அடிப்படைத் தத்துவங்கள்!

'பல்கலைக்கழகங்களின் செயற்களம்—பணிபுரிந்திடும் அரங்கம்—பரந்து விரிந்தவண்ணம் உள்ளது' என்று குறிப்பிட்டேன்; அதே சமயம், பல்கலைக்கழகங்களின் அடிப்படை வேலைமுறைகளில் மாற்றமேதுமில்லை; ஆனால் அவை, 'சாமானியர்களின் எண்ணத்தினைப் பிரதிபலிப்பதாக—வலுப்படுத்திடுவதாக அமைந்திடவேண்டும்' என்பதனையும் சுட்டிக்காட்டினேன். பல்கலைக்கழகங்களின் முன்னுள்ள அடிப்படைத் தத்துவங்கள் யாவை?—

**மாணவர்களின் அறிவுத் தாகத்தினைத் தக்கவிதத்தில் தீர்த்திட வேண்டும்; அறிவின் பல்வேறு கூறுகளையும் தெரிந்து -- தெளிந்திட வழிகாட்டிட வேண்டும்; கருத்துத் தெளிவும், சுதந்தரமும், செயல் திறனும் மிக்கோராய் வாழ்ந்திடும் உள்ளப்பாங்கும் உறுதியும், மாணவர்களிடத்தில் அமைந்திட வேண்டும்.**

**சமரச நோக்கம்—பரந்த மனப்பான்மை—'சத்துள்ளது எது? சாரமற்றது எது?' என்பன பகுத்துணரும் போக்கு—எந்தப் பிரச்சினையையும் அச்சம், தயை, தாட்சண்யம், விருப்பு—வெறுப்பற்ற நிலையில் நோக்கிடும் நெஞ்சவலிமை—மற்றவர்களது கருத்தையும் கண்ணோட்டத்தையும் உணர்ந்து மதித்து நடந்திடும் சகிப்புத்தன்மை—நன்னெறியுடன் கூடிய சான்றாண்மை — ஆகிய அருங்குணங்களே மனித வாழ்க்கையின் மாறாத அடிப்படைத் தத்துவங்களாக அமைந்துள்ளன!**

இப்படிப்பட்ட அருங்குணங்களை மாணவர்களிடம் ஊட்டி வளர்த்து—பக்குவப்படுத்திப் பயிற்றுவித்து, ஆண்டுதோறும் பட்டதாரிகளாக -- நல்ல வழிகாட்டும் குடிமக்களாக உருவாக்கிடும் பணி பல்கலைக் கழகங்களில் தொடர்கின்றது!

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், பிரசல்ஸ் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்ட பின்வரும் கருத்துக்கள் நம் அனைவரின் கவனத்திற்கும் உரியனவாகும்:—

**"சனநாயகம் தக்க -- சீரிய முறையில் செயல்பட வேண்டுமாயின், அதற்கான தனித்த நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்; அரசாங்கம் அமைத்திடும் முறை மட்டும் போதாது!**

**"சனநாயக உணர்வையும், நெறிமுறைகளையும் பல்கலைக் கழகங்கள் நன்கு ஊட்டி -- உணர்த்திட வல்லனவாகும்.**

**"மற்றவர் கருத்துக்களை மதித்து—இணைந்து, செயல்புரிந்திடும் பண்பு—வேற்றுமைகளைப் பேசித் தீர்த்து நல்வழி கண்டிடும் கருத்தோட்டம்—சனநாயக முறைக்கு அவசியமாகும். தனிப்பட்ட மனிதனின் பொறுப்புணர்ச்சியும், நியாய உணர்வும் சனநாயகப் பாரம்பரியத்திற்கு நல்லதோர் பாதுகாவலாக விளங்கும்.**

**"கடந்தகால குழப்பங்கள், கிளர்ச்சிகள், கருத்துக் குமுறல்களைப் பல்கலைக்கழகங்களில் அலசி ஆராயப்பட வேண்டும்; அதனால் ஏற்பட்டுள்ள அழிவையும் அபாயத்தையும், சாதக பாதகங்களையும் உணர்ந்து, வருங்கால நல்வாழ்விற்கான சாத்தியக் கூறுகளையும், சந்தர்ப்பங்களின் அறைகூவலையும் ஏற்கத் தயாராகவேண்டும்!**

## சனநாயகத்தின் எழில் தத்துவம்!

'சனநாயகம்' என்பது, 'மக்கள் அரசு முறை' என்பதோடு முடிந்து விடவில்லை—புது வாழ்விற்கான அழைப்பு அது; பொறுப்பையும் பலாபலன்களையும் அனைவரும் சரிசமமாகப் பங்கிட்டுக்கொண்டு செயலாற்றிடும் ஓர் அருங்கலைக்கூடம்; ஒவ்வொரு மனிதனிடத்தும் உள்ளடங்கியுள்ள அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்தி - ஒருங்கிணைத்து - 'பொதுத் தன்மை' என்ற குறிக்கோளை அடைந்திடச் செயலாற்றிட வைத்திடும் பெருநோக்கம் கொண்டதே சனநாயகம்!

## பொறுப்பற்ற போக்கினைத் தகர்த்தெறிய!

இந்த அடிப்படையின்படி ஒழுகினால், எந்த ஒரு தனி மனிதனின் செயல் திறமும் பயனின்றி வீணாகப் போய்விடாது!

"எந்த ஓர் ஆணும் சரி—பெண்ணும் சரி—வறுமைப் பிடிக்குள் சிக்கிச் சீரழிய முடியாது! அடக்குமுறைக் கொடுமையினால் எவரும் சக்தியற்றவர்களாக்கப்பட மாட்டார்கள்! யாருடைய வளர்ச்சிக்கும் தடை ஏற்பட்டிட முடியாது! இந்த நிலை நாட்டில் ஏற்பட்டிட வேண்டும்!

சர்வாதிகாரமும், கொடுங்கோன்மையும் பூண்டோடு கருவறுக்கப்பட வேண்டும்! பகட்டும், வெற்றுரைகளும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிடும் போக்கினைத் தகர்த்தெறிந்தாக வேண்டும்! அப்போதுதான், மனிதத்தன்மை—மானிடத்தின் மாண்பு அரசோச்ச முடியும்!

இச்சீரிய செயலில் ஈடுபடத்தக்க செயல் வீரர்களை, பல்கலைக் கழகங்கள் ஆண்டுதோறும் பட்டதாரிகளாகத் தயாரித்து அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதே எனது பேராவல்!"

[அடுத்து முதலமைச்சர் அண்ணா அவர்கள், மாணவர்களின் கடமையை நினைவுறுத்தி ஆற்றிய பகுதி வெளிவரும்.]

'ஸ்டேட்ஸ்மன்' படப்பிடிப்பு:



# மதிப்பிழந்து திரும்பும் 'தலைவர்' காமராசர்!

## கட்சித் தொண்டர்களிடை ஏமாற்றம்--அதிருப்தி!

### 'கழகத்தின் செல்வாக்கை மீறி காங்கிரசுக் கட்சி புத்துயிர் பெறுமா' என மனக்கலக்கம்!

"'மறுமுறையும் தலைவர் பதவிக்கு நிற்பதில்லை' என்ற காமராசரின் முடிவு, தமிழகத்தில் உள்ள காங்கிரசுக் கட்சியினருக்குப் பெருத்த ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் அளித்திருப்பதாகத் தெரிகிறது"

என 'ஸ்டேட்ஸ்மன்' 19—11—67-ம் நாள் இதழில், அதன் தென்னக நிருபர் எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். அப்பகுதியின் முக்கிய கருத்துக்களாவன:—

"தமிழகத்து அரசியல் அரங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அருமை பெருமைகள் பரவிவரும் இந்த நேரத்தில், 'இருந்த தலைவர் பதவியையும் காமராசர் இழந்துவிட்டுத் திரும்பி வருவது, தமிழ்நாடு காங்கிரசு இழந்துள்ள பலத்தை எந்த வகையிலும் திரும்பப் பெறுவதற்கு உதவாது' எனக் கட்சித் தொண்டர்கள் மனக் கலக்கமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

தம் எதிர்காலத் திட்டமென்ன என்பதனைக் காமராசர் இது வரை வெளிப்படையாகச் சொல்லவில்லை யென்றாலும், 1972-ல் மீண்டும் தமிழகத்து அரசியலில் காங்கிரசுக்குச் செல்வாக்குத் தேடும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கிராம மக்களிடையேயும் மாணவர் உலகத்திலும் புதிய செல்வாக்கைப் பெற உழைப்பது காமராசரின் திட்டமாக இருக்குமானால், அதிலும் அவர் வெகு எளிதில் வெற்றிபெற முடியாது என்பது உறுதி!

உழவர் பெருமக்களும் காங்கிரசின் பக்கம் வருவதாக இல்லை!

மாணவர்களும் கழகத்தின் பக்கம்தான் இருக்கின்றனர் என்பதனை, அண்மையில் நடந்த மாணவர் அமைப்புக்களுக்கான தேர்தல் விளக்குகிறது

காங்கிரசுக்குப் புத்துயிரூட்டுவதற்குக் காமராசர் எத்தகைய முயற்சிகள் வேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால், பெரிய தவறுகளோ, பொதுமக்களின் வெறுப்போ எழாதவகையில் உள்ள கழக ஆட்சி நிர்வாகத்தை அவர் வெல்வது என்பது முடியாத காரியம்!"

## நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

### 21--11--67

**அந்தியூர்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: ஏ. என். சுப்பிரமணியம்; பேசுவோர்: அ. க. துரைராசு, அ. வெற்றிவேல். (முருகு பாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

**பொத்தனூர்**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: மா. செந்தில்நாதன்; பேசுவோர்: ஈரோடு மு. சின்னசாமி எம்.எல்.ஏ., சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., பொ. மணிமாறன், ம. செகநாதன், கதிரவன்.

### 22--11--67

**பட்டிவீரன்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பாண்டியனார் திடலில்; தலைவர்: க. காசிராசன்; பேசுவோர்: நீ. அன்புச்செழியன் பி.ஏ., வெ. கண்ணன், க. திருமாறன்.

**குருவரெட்டியூர்**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு மாரியம்மன் திடலில்; தலைவர்: கு. சி. குருமூர்த்தி; பேசுவோர்: தங்கம்—சிவநடராசன், அம்மையப்பன். (முருகு பாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

## உலகத் தமிழ் மாநாட்டு கலைக் காட்சி

### ஒரு வேண்டுகோள்

இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு சனவரியில் நடைபெறுவதையொட்டிக் கலைக் காட்சி ஒன்றும் மாநாட்டின் சார்பில் அமைக்கப்பெறும்; அக்காட்சியில், தமிழர் மொழி இலக்கியம் — வரலாறு — பண்பாடு போன்றவற்றை விளக்கும் அரிய நூல்களும் இடம் பெறும்.

அக்காட்சியில், தங்கள் தங்கள் நூல்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்பும் பதிப்பகத்தார்களும், எழுத்தாளர்களும், கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், தமிழில் வெளிவந்து நின்றுபோன பத்திரிகைகளும் இக்காட்சியில் வைக்கப்பெறும்.

கிடைத்தற்கரிய பழந்தமிழ் நூல்கள், ஓலைச்சுவடிகள் ஆகியவையும் காட்சியில் இடம்பெறும்; அவற்றை வைத்திருக்கும் அன்பர்கள், கீழ்க்கண்ட முகவரிக்கு அன்புடன் தகவல் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்!—

செயலாளர், கலைக் காட்சிக் குழு
60/10, எட்வர்டு எலியட்ஸ் வீதி,
மைலாப்பூர், சென்னை-4.

## பிரிட்டிஷ் நாணய மதிப்பு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிரிட்டனில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியின் விளைவாகவே இந்த நாணய மதிப்புக் குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றிரவு இந்திய நிதித் துறை வெளியிட்ட அறிக்கையில், 'இனி பிரிட்டிஷ் ஸ்டார்லிங்கின் மதிப்பு ரூ. 18-க்குச் சமம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இதுவரை ஒரு ஸ்டார்லிங் மதிப்பு இந்தியாவின் 21 ரூபாய்க்குச் சமமாக இருந்தது.)

பிரிட்டிஷ் நாணய மதிப்புக் குறைப்பினையடுத்து, அமெரிக்கா தனது நாணய மதிப்பைக் குறைத்துக் கொள்ளாது என்று அமெரிக்கத் தலைவர் ஜான்சன் அறிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13 அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)